# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 20, 2019

Weekly E-paper • JULY 20, 2019





# சர்வம் மத்திய அரசு மயம்

**போலோ "ஜெய் ஸ்ரீராம்"**

மு.தமிழ்மறவன்

**தமிழினமே எச்சரிக்கை!**

தலையங்கம்



**வங்கிப் புரட்சி**

இக்லாஸ் உசேன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஜூலை 20, 2019 Weekly E-paper ● JULY 20, 2019

# புதிய சட்டத் திருத்தம்

# சர்வம் மத்திய அரசு மயம்

2008ஆம் ஆண்டு, காங்கிரஸ் அரசினால் கொண்டு வரப்பட்ட தேசியப் புலனாய்வு முகமைச் சட்டத்தில் (National Investigation Agency Act, 2008) மேலும் சில திருத்தங்களை இன்றைய பாஜக அரசு கொண்டுவந்துள்ளது. இது மோசத்திலிருந்து மிக மோசம் என்னும் நிலையை நோக்கியதாக உள்ளது. 2008ஆம் ஆண்டு சட்டத்தை, அன்று திமு கழகம் ஆதரித்ததால், இன்று இத் திருத்தத்தையும் ஆதரிக்க நேர்ந்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. திமு கழகத்தை நாம் நூற்றுக்கு நூறு ஆதரித்தாலும், இந்த முடிவை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கத்தி பழைய கத்திதான் என்றாலும், அதனை இப்போது கையில் ஏந்தி இருக்கும் புதியவர் மிக ஆபத்தானவர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்தச் சட்டத்தையே முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துவதே, திமுகவின் ஜனநாயகக் கோட்பாட்டிற்கும், மாநில சுயாட்சிக் கொள்கைக்கும் ஏற்றதாக இருக்கும்.

– சுப.வீரபாண்டியன்

**(இச்சட்டம் குறித்துப் பேரா. அ.மார்க்ஸ் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன...)**

*NIA சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களைப் பார்ப்போம்.*

வெளிநாட்டில் செய்யப்படும் குற்றங்களை விசாரிப்பது நடைமுறைச் சாத்தியமா என்பது ஒரு மிகப் பெரிய கேள்விக்குறி. 26/11 எனப்படும் மும்பைத் தாக்குதலை ஒட்டி 2008இல் ‘தேசியப் புலனாய்வு முகமை’ (NIA) உருவாக்கப்பட்டபோது இந்தச் சட்டத்தில் எல்லாவற்றையும் மத்தியில் குவிக்கும் போக்கு அதில் தீவிரமாக வெளிப்படுவதாக விமர்சிக்கப்பட்டது. அதற்கு ஆதரவாக இருந்தவர்கள் இந்த ஐயத்தையும் விமர்சனத்தையும் மிக எளிதாக ‘டிஸ்மிஸ்’ பண்ணினார்கள்.

முதல் NIA வெடி குண்டுத் தாக்குதலுக்குப் பின்னணியாக இருக்கும் “பயங்கரவாத நிதி உதவி” (terror funding) மற்றும் ‘பயங்கரவாதக் குழுக்கள்’ குறித்த புலன் விசாரணைகளிலேயே அது கவனம் கொண்டிருந்தது. NIA சட்டத்தைப் பொருத்தமட்டில் அதற்குக் கைது செய்யும் அதிகாரம் கிடையாது. NIA அமைப்பு, புலன் விசாரணை செய்யுமே ஒழியக் கைது செய்யும் அதிகாரம் காவல்துறையிடமே இருந்தது. அதே போல NIA வுக்கு பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுக்கும் அதிகாரமும் கிடையாது. NIA சட்ட இணைப்பில் கொடுக்கப்பட்ட குற்றங்களைப் புலனாய்வு செய்து வழக்கை நடத்துவது மட்டுமே அதன் பணி.

இப்போது NIA சட்டத் திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு அம்சம் என்னவெனில் இப்போதுள்ள அரசின் ஆதர்சங்களான இஸ்ரேல் மற்றும் அமெரிக்க பாணியில் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்பதுதான். அங்குள்ள புலன் விசாரணை முறையை அப்படியே இங்கு காப்பி அடிக்க வேண்டுமானால் அதற்குரிய வகையில் இங்கு அகக் கட்டுமானங்கள் இருக்க வேண்டுமே என்கிற சிந்தனை இவர்களுக்குக் கிடையாது.




எடுத்துக்காட்டாக ஒன்றைப் பாருங்கள். எங்கெல்லாம் இந்தச் சட்டம் செயல்படுத்தப் படும் என்பதை இச்சட்டத்தின் பிரிவு 1 வரையறுக்கிறது. இதில் கூடுதலாக ஒரு கூற்றை இப்போது சேர்க்கிறார்கள். அதன்படி, “பட்டியலிலுள்ள குற்றம் ஒன்றைச் செய்பவர், இந்தியாவுக்கு அப்பால் இருந்து குற்றத்தைச் செய்த போதிலும் அக்குற்றம் இந்தியாவைப் பாதிக்கும் அல்லது இந்தியர்களைப் பாதிக்கும் என்கிறபோது அங்கும் இச் சட்டம் பயன்படுத்தப்படும்”.

இன்னொரு நாட்டில் குற்றம் நடந்தால் அதையும் விசாரிக்கும் அதிகாரம் உள்ள சட்டம் நம்மிடம் இருந்தால் மட்டும் போதுமா? அதற்கு உரிய அனுமதியையும் உதவிகளையும் அந்த நாடு அளிக்குமா? அதுவும் நல்ல உறவு இல்லாத நாடுகளில் இதெல்லாம் சாத்தியமா? அப்படிக் குற்றம் செய்தவர்களை அந்த நாடே பிடித்துக் கொடுக்காத நிலையில் நாம் போய் அதைச் செய்துவிட முடியுமா? அவர்களே பிடித்துக் கொடுப்பார்கள் என்றால் பிறகு இப்படி ஒரு சட்டம் எதற்கு? இதெல்லாம் நடக்கிற காரியமா?

NIA சட்டத்தில் இப்போது செய்யப்படும் இன்னொரு திருத்தம் 11ம் பிரிவில் உள்ள (3) லிருந்து (7) வரைக்குமான உட் பிரிவுகள் இனி செல்லாது. இந்தப் பிரிவுகள் என்ன சொல்கின்றன? ஏன் இப்போது மோடி அரசு அவற்றை நீக்குகிறது? தற்போது உள்ள NIA சட்டப் பிரிவுகளின்படி. புலன் விசாரணை முடிந்து வழக்கு விசாரணை தொடங்கும்போது அவ்வப் பகுதி மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளின் பரிந்துரையின்படி சிறப்பு நீதிமன்றத்திற்கான நீதிபதிகளை மத்திய அரசு நியமிக்கும். இதை இப்போது மோடி அரசு மாற்றுகிறது. எப்படி? இனி சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படாமல் இப்போதுள்ள செஷன்ஸ் கோர்ட்டுகளே இந்த NIA வழக்குகளையும் விசாரிக்குமாம். இது ஏற்கனவே வழக்குச் சுமைகளால் கூன் விழுந்து கிடக்கும் நீதித்துறையை மேலும் பிரச்சினைக்கு உள்ளாக்கும்.

*(இக்கட்டுரையை முழுமையாகப் படிக்க விரும்புவோர் அ.மார்க்ஸ் (Marx Anthonisamy) அவர்களின் முகநூல் பக்கத்தைப் பார்க்கவும்.)*

# போலோ "ஜெய் ஸ்ரீராம்"

● மு.தமிழ் மறவன்

தாருகா வனத்தில்
ரிஷிபத்தினிகளை வன்புணர்ந்த சிவனை வணங்கி,
பாலியல் வழக்கிலே போராளிகளைக் கைது செய்!

நெருப்பிலே சுட்டு, நெய்யிலே வதக்கிய,
சிவந்த சுவையான பசுவின் இறைச்சியை உண்ட
இராமனை வணங்கி,
மாட்டிறைச்சி உண்ட இசுலாமியனை அடித்துக் கொல்!

சீனாவுக்கு மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்யும்
மோடியை சிலாகித்துக் கொண்டே,
மாடுகளை ஏற்றிச் செல்லும் வியாபாரிகளைப் படுகொலை செய்!

கழகங்கள் இல்லாத தமிழகம் படைக்கக்
கழகங்களோடு கூட்டணி வை!


இந்தியாவின் முதல் குடிமகனைக்
கோவிலுக்குள் விடாதே!
ஆயினும், தலித் வீட்டில் உணவருந்து!

துறவறம் பேசிக் கொண்டே
கள்ள உறவுகளோடு காதல் செய்!

தன்னைத்தானே தாக்கிக் கொண்டு
இசுலாமியன் தாக்கியதாய்ச் சொல்!

சட்டையில் தேசியக் கொடி ஏற்று
சட்டத்தை மதிக்காதே!
நீதிமன்றத்தில் மன்னிப்பு கேள்!
மக்கள் மன்றத்தில் மார்தட்டு!

"முத்தன்ன வெண்முறுவல்
செவ்வாயும் முலையும்
அழகழிந்தேன் நான்
புணர்வதோர் ஆசையினால்"



"அவரைப் பிராயம் தொடங்கி
ஆதரித்தெழுந்த என் தடமுலைகள்
துவரைப் பிரானனுக்கே சங்கற்பித்துக் கொடுத்தேன் "
எனக் காமம் வெளிப்படுத்திப் பாடிய
ஆண்டாளைத் தெய்வம் என்று சொல்!
பெண்ணுரிமை பேசுவோரை வேசி என ஏசு!

தலித் மக்களை தீண்டத்தகாதவன் எனச்சொல்!
இந்துக்களே ஒன்றிணைவோம் என முழங்கு!
சாதிக்கொரு சட்டமியற்று!

பிரிட்டிஷாருக்குச் சேவை செய்!
ஹிட்லரின் கை வலுத்தால் ஜெர்மன் படி!
சுதந்திரம் கேட்டானா? காட்டிக் கொடு!
ஆனால், சூத்திரனுக்கு தேசபக்தி கற்றுக்கொடு!

பிரதமர் அலுவலர்கள் நம்மாளு,
உயர் பதவிகள் நம்மாளு,
நீதிபதிகள் நம்மாளு,
IAS, IPS நம்மாளு,
கவர்னரெல்லாம் நம்மாளு,
இந்தியத் தூதர்களெல்லாம் நம்மாளு,
நம்மாளு என்றால் பூணூலு!
இருந்தாலும் ஏழையென்று நீ சொல்லு!

இட ஒதுக்கீட்டை எதிர்த்து நில்லு!
ஆனா,
10% கேட்டு துள்ளு!

தமிழை நீசபாஷைனு தள்ளிவை!
நாங்களும் தமிழரேன்னு திராவிடத்துக்குக் கொள்ளிவை!

போலோ "ஜெய் ஸ்ரீராம்"!!!

---


## 2019 ஜூலை 21, 23, 25

ஜூலை 21, மாலை 6 மணி
அன்பகம், தேனாம்பேட்டை,
சென்னை -18
**புதிய கல்விக் கொள்கை புதிய அபாயம்**
கருத்தரங்கம்
தலைமை: 'பெல்' ராஜன்'
சிறப்புரை: தயாநிதிமாறன் எம்.பி.
பேரா. கருணானந்தம்.

ஜூலை 23, மாலை 6 மணி
YMCA அரங்கம்,
பாரிமுனை, சென்னை
**காலத்தை வென்ற கலைஞர்**
நூல்வெளியீட்டு விழா
தலைமை: மின்னூர் சீனிவாசன்
கருத்துரை: சுப. வீரமாண்டியன்,
தஞ்சை கூத்தரசன்,
கண்மணி சுப்பு கண்ணதாசன்

ஜூலை 25, மாலை 6 மணி
பெரியார் திடல், சென்னை,
கலைஞரின்
**நெஞ்சுக்கு நீதி**
தொடர் சொற்பொழிவு
பொழிவு- 10
உரையாளர்: சுப. வீரமாண்டியன்

## அனைவரும் வருக

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## அறிவுத் தேடல் -3



13-07-2019 அன்று திருச்சி, கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற அறிவுத் தேடல் கருத்தரங்கில், 'வால்டேரும் ரூசோவும்' என்னும் தலைப்பில் தோழர் சுப.வீரபாண்டியன் உரையாற்றினார். முன்னாள் அமைச்சர் கே.என். நேரு, என்.ஆர்.- ஐ.ஏ.எஸ் அகடமி நிறுவனர் விஜயாலயன், பேரவைத் தோழர்கள் புலேந்திரன், கார்த்திக், பிரவீன், தீன தயாளு, பழ.மணிவண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

## சேலம் கருத்தரங்கம்




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில், 14-07-2019 அன்று சேலத்தில் மொழிப்போர் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. புலவர் செந்தலை கவுதமன் சிறப்புரையாற்றினார். தோழர்கள் சிற்பி செல்வராஜ், புவனேஸ்வரி, ராஜ்குமார், சுந்தரவதனம் ஆகியோர் பங்கேற்றனர்.

கோவையில்

**கருஞ்சட்டைப் பதிப்பகம்**

19-07-2019 முதல் 28-07-2019 வரையில், கோவை கொடீசியா அரங்கில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் கருஞ்சட்டைப் பதிப்பகம் இடம் பெற்றுள்ளது.

**கடை எண்: 214**

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## தமிழினமே எச்சரிக்கை!

பெரியார் மண்ணின் தமிழை, தமிழர்களின் தாய் மொழியை, பல்லாயிரம் ஆண்டுகள் செழிப்புற்று வளர்ந்த 'தமிழை' ஒழித்துக் கட்டுவதென மோடியின் மத்திய அரசு கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது.

சென்ற வாரம் அஞ்சல் துறையில் அஞ்சல் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தேர்வை இந்தி மற்றும் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்ற மத்திய அரசின் அறிவிப்பு, தமிழகத்தின் கடும் எதிர்ப்பால், திரும்பப் பெறப்பட்டது.

இதுகுறித்து திமுக சட்டமன்ற உறுப்பினர் எழிலரசன் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், எதிர்காலத்தில் மத்திய அரசு நடத்தும் தேர்வுகளில், தமிழ் மொழியும் தேர்வு மொழியாக இருக்குமா இருக்காதா என்று மத்திய அரசு பதிலளிக்க ஆணையிட்டுள்ளது.

இந்த நிலையில் உச்சநீதிமன்றம், தன் அதிகாரப்பூர்வ வலைத்தளப் பக்கத்தில் இனிவரும் வழக்கின் தீர்ப்புகள் இந்தி, தெலுங்கு, அசாமி, கன்னடம், ஒடியா,ஆங்கிலம் ஆகிய 6 மொழிகளில் வெளியிட இருப்பதாகச் செய்தி வெளியிட்டு இருந்தது.

இதற்கும் தமிழகத்தில் திமுக உள்ளிட்ட அரசியல் கட்சிகள், வழக்கறிஞர்கள், தமிழறிஞர்களின் கடும் எதிர்ப்பு எழுந்தது. இப்பொழுது, இரண்டு வழக்குகளின் தீர்ப்புகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு உச்ச நீதிமன்ற வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

நீண்டகாலக் கடும்போராட்டத்திற்குப் பிறகு நீதிமன்றத் தீர்ப்பு தமிழில் வெளியாகிறது என்பது ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தாலும், இன்னொரு புறத்தில் தமிழ் மொழிக்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மத்திய அரசு செய்து கொண்டிருப்பது வருத்தம் தருகிறது.

தமிழகத்தில் இருக்கும் 3,688 அரசு உயர்நிலைப்பள்ளிகள், 4,040 மேல்நிலைப்பள்ளிகளில், பயோமெட்ரிக் கருவிகளின் மூலம், தமிழ் உள்ளிட்ட மொழிகளில் ஆசிரியர்கள் வருகையைப் பதிவு செய்துவந்தனர்.

ஆனால், இப்பொழுது திடீரென எந்த முன்னறிவுப்புமின்றி, இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே பதிவு செய்யும் முறையைத் தொடங்கி இருக்கிறது.

அதாவது தமிழர்களின் தாய் மண்ணில், தமிழ் மொழி நீக்கப்பட்டு இந்தியை நுழைக்கிறது மத்திய பாஜக அரசு.

அதுகுறித்து, பயோமெட்ரிக் கருவியில் இந்தியிலும்,ஆங்கிலத்திலும் ஆதார் அட்டை அச்சிட்டிருப்பதினால், அதை இக்கருவியில், இணைக்கும்பொழுது இந்தி வருகிறது என்று துறை சார்ந்து பதில் சொல்கிறார்கள்.

இது ஏற்றுக் கொள்ளக் கூடிய விளக்கம் இல்லை. தமிழைப் புறக்கணித்துவிட்டு இந்தியைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

மத்திய அரசு சில வேளைகளில் பின்வாங்குவது போல பாவனை காட்டினாலும், தமிழ் மொழி அழிப்பில் எண்ணமுடையதாகவே இருக்கிறது. அதற்குத் துணை போகிறது தமிழக அரசு.

எச்சரிக்கையாக இருக்க வேண்டும் தமிழகம்.

# வங்கிப் புரட்சி

● இக்லாஸ் உசேன்

ஒரு நாட்டின் பொருளாதாரத் தொழில் வளர்ச்சியை வங்கிகள்தான் தீர்மானிக்கின்றன.



1969 ஜூலை19 நள்ளிரவு இந்தியாவின் வங்கிப் புரட்சியாக அன்றைய பிரதமர் இந்திரா காந்தி ஒரு அறிவிப்பை வெளியிட்டார். பதினான்கு தனியார் வங்கிகள் அரசுடமையாக்கப்படும் என்றும், அது அன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருவதாகவும் அறிவித்தார்.

1935-இல் தொடங்கப்பட்ட ரிசர்வ் வங்கிதான் இந்தியா சுதந்திரம் பெற்றபின் 1948-இல் அரசுடமையாகிய முதல் வங்கி. அதன்பின் 1955இல் இம்பீரியல் வங்கி அரசுடமையாக்கப் பட்டு, அதை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா எனப் பெயர் மாற்றம் செய்து ரிசர்வ் வங்கியின் நேரடித் தலைமையின் கீழ் கொண்டு வந்தனர்.

வங்கிகள் என்பது ஒரு பணத்தோட்டம் போன்றவை. எங்கே பணம் புரள்கிறதோ அங்கே பணத்தோட்டமும் உருவாகும். 1939-45இல் இரண்டாம் உலகப்போரால் பணப்புழக்கம் அதிகரிக்க அதிகரிக்க, புதிய வங்கிகள் தொடங்கப்பட்டன.

பணப்புழக்கம் அதிகரித்தால் வங்கிகள் உருவாவதும், பணப்புழக்கம் மந்தமாகும் போது வங்கிகள் திவாலாவதும் 2009இல் அமெரிக்காவையும் 1941-44இல் இந்தியாவையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே புரியும்.

1969-இல் வங்கிகளை அரசுடைமையாக்கிய போது அந்த வங்கிகள் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கி இருந்தன. அதைக் காப்பாற்றத்தான் இந்திரா காந்தி அரசுடமையாக்கினார் என்ற குற்றச்சாட்டை எழுத்தாளர் பிரேம்நாத் பசாஸ் தன் 'இந்திய வரலாற்றில் பகவத்கீதை' என்ற நூலில் சொல்லியுள்ளார்.

வங்கிப் புரட்சிக்குப் பின் 1971இல் வங்கப் போரின் வெற்றியில் புகழின் உச்சத்தில் இருந்த இந்திரா காந்தி அரசு, 1972-இல் நிதிநிலை அறிக்கையில் 52 விழுக்காடு ராணுவத்துக்குச் செலவிடக்கூடிய அவலத்தில் இயங்கியது. அப்போதைய நம் பணவீக்கம் 40 விழுக்காடாக இருந்தது.

1969க்குப் பிறகு இந்திரா காந்தியின் அமைச்சரவையில் மோகன் குமாரமங்கலம் போன்ற கம்யூனிஸ்ட்கள் அமைச்சர்கள் ஆனதோடு சில முக்கிய பதவிகளிலும் அமர்த்தப்பட்டார்கள்.

1969இல் நடந்த வங்கி அரசுடமையாக்கலுக்குக் காரணம் இந்திராவின் தொலைநோக்குக்குச் சிந்தனையோ, கூட்டணி கட்சியான கம்யூனிஸ்ட்களின் நிர்ப்பந்தமோ, இல்லை, தனியார் வங்கிகளை நிதிநெருக்கடியில் இருந்து காப்பாற்றும் முயற்சியோ என மூன்று விதமான காரணங்கள் இருந்தன.

இதுவரை இந்தியாவின் பொருளாதார பலம் என்றால் அது அரசு வங்கித்துறையின் நம்பகத்தன்மைதான்.

இன்றைக்கு 2019 ஜூலை 19-இல் வங்கிப்புரட்சி நடந்து 50ஆண்டை கொண்டாடப் போகின்றன பொதுத்துறை வங்கிகள்.

இனிவரும் காலங்களில் அரசு வங்கிகள் இந்தியாவின் பொருளாதாரத்துக்கு ஒரு உந்துசக்தியாக இருக்கப் போவதில்லை.

அரசு வங்கிகளை அழித்தொழிக்கும் வேலையை மைய அரசு தொடங்கிவிட்டது.

ஒவ்வொரு அரசு வங்கியும் வாராக்கடன் என்ற வசூலிக்கமுடியாமல் போகும் கடன்கள், லட்சக்கணக்கான கோடிகளில் நிலுவையால் அடுத்தகட்டச் செயல்பாட்டுக்குப் போகமுடியாமல் திணறுகின்றன.

விஜய் மல்லையா 9,000 கோடி வங்கி கடன் ஏமாற்றினார் என்றால், அதில் 8,000 கோடி அரசு வங்கிகளில் வாங்கிய கடனாகத்தான் இருக்கும்.

இன்றைக்கு ரிலையன்ஸ் Jio நிறுவனம் 25 ஆயிரம் கோடியில் தொடங்கி அவற்றின் பேரில் ஒன்னேகால் லட்சம் கோடி கடன் வாங்கப்பட்டுள்ளது. ஒரு நிறுவனத்துக்கே இவ்வளவு கடன் கொடுக்கும் கொடுமை ஒருபுறம் இருக்க, சமீபத்தில் ரிசர்வ் வங்கி அளித்த மற்றொரு விவரத்தின் படி, வங்கிகள் வழங்கிய கடன்களில் 30 வாடிக்கையாளர்கள் மட்டும் சுமார் ரூ.8.42 லட்சம் கோடிகளைப் பெற்று உள்ளனர்.

மொத்த வங்கிக் கடன்களின் மதிப்பு ரூ.85.16 லட்சம் கோடிகள்.

அதாவது மொத்தக் கடன்களில் 10 சதவீதத்தை வெறும் முப்பதே வாடிக்கையாளர்கள் பெற்றுள்ளனர்.

விவசாயத் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் மதிப்பே ரூ. 11.07 லட்சம் கோடிகள்தான்.

இதில் வாராக்கடன் என்பது 9லட்சம் கோடிக்கு மேல் போய்விட்டது.

இன்றைக்கு இந்தியாவில் 27அரசு வங்கிகளும் 55தனியார் வங்கிகளும் செயல்படுகின்றன.

ஆனால் வாராக்கடன் அளவு 80விழுக்காட்டிற்கு மேல் அரசு வங்கிகளின் தலையில்தான் விழுந்துள்ளது.

25ஆயிரம் முதலீட்டோடு தொடங்கிய ஜியோவுக்கு ஒரு லட்சம் கோடி கடன் கொடுக்கும் இந்திய அரசுதான், நாலு லட்சம் கோடி சொத்து வைத்துள்ள பி.எஸ்.என். எல்-க்கு நிதி திரட்ட முடியாமலும், ஊழியர்க்கு ஊதியம் கொடுக்ககூட முடியாமலும் பொதுத்துறை டெலிகாம் நிறுவனத்தை அழித்தொழிக்கும் வேலையைச் செய்துவருகிறது.

தனியார் முதலாளிகளின் நலனுக்காக அரசு வங்கிகளை, மீட்கமுடியாத பாதாளத்துக்குள் தள்ளி, அரசு சொத்தைத் தனியார்க்குத் தாரை வார்த்து வருகிறது இன்றைய மோடி அரசு.

தற்சார்புப் பொருளாதார வளம் என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றது.

அது மீண்டும் அந்நிய நாடுகளின் கைகளுக்கோ, தனியார் முதலாளிகளின் ஆளுகைக்கோ, போனால் அறிவிக்கபடாத அந்நிய ஆட்சியின் முதுகெலும்பற்ற கொத்தடிமைகள் போன்று மக்கள் வாழ வேண்டிய அவலநிலை உருவாகும்.

இன்றைய இந்தியாவின் பொருளாதார வளம் என்பது வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுனங்கள் பொதுத்துறை நிறுவனமாக இந்திரா காந்தி அம்மையார் உருவாக்கிய வங்கி புரட்சியால் ஏற்பட்டவையே.

இந்திரா காந்தியால் ஏற்பட்ட வங்கிப்புரட்சியை, தனியாருக்கும், பெரு முதலாளிக்கும் தாரைவாக்கும் வேலைகளைச் சங்கிப்புரட்சியாக சங்கிகள் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

சங்கிப்புரட்சி முழுமையாக நிறைவேறினால் இந்தியாவின் எதிர்காலம் இருண்டகாலமாகத்தான் இருக்கும்... ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,